**உள்ளூராட்சி சேவைகள் ஓய்வூதிய நிதியம் - 2022**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 மறுப்பு அபிப்பிராயம்

உள்ளூராட்சி சேவைகள் ஓய்வூதிய நிதியத்தின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமான செலவினக் கணக்கு மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்புக்கள் உள்ளடங்கிய நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்கள் என்பவற்றை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

நிதியத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக நான் அபிப்பிராயம் ஒன்றை வெளியிடவில்லை. எனது அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் முக்கியத்துவம் காரணமாக நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றை வழங்குவதற்குப் போதிய மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ள எனக்கு முடியாமல் இருந்தது.

### 1.2 மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் மறுக்கப்படுகின்றது.
இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் தயாரித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிதியம் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது நிதியத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.
நிதியத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நிதியத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு நிதியம் அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்**

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களை தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நிதியத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு நிதியத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள

எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிதியத்தின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- நிதியத்தின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- நிதியத்தின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் நிதியம் இணங்கியிருந்ததா என்பதும்,

- நிதியம் அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும்,

- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்களின் தயாரிப்பு தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| உரிய நியமங்களின் தொடர்புகளுடன் இணங்காமை | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நியம இலக்கம் 01 இன் பிரகாரம் நிதியத்தால் அட்டுறு அடிப்படையில் கணக்குகள் மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும், மீளாய்வாண்டில முன்னைய ஆண்டுகளுக்காக மற்றும் மீளாய்வாண்டிற்காக பெறப்பட்டிருந்த பங்களிப்புத் தொகை ரூபா 91,670,745 காசு அடிப்படையில் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | உள்ளூராட்சி சேவை ஓய்வூதியம் வழங்கப்படுகின்ற பயனாளிகளுக்கு மாதாந்த ஓய்வூதியக் கொடுப்பனவு 2011 ஆம் ஆண்டு முதல் படிப்படியாக குறைவடைந்து தற்போது செயலற்ற நிலையில் காணப்படுகின்ற இந்த நிதியத்தைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்பட்டிருக்காததால் ஓய்வூதியக் கொடுப்பனவுகள் அட்டுறு அடிப்படையில் சீர்செய்யப்படமாட்டாது. | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 01 இன் பிரகாரம் வருமானம்,செலவுகள் அட்டுறு அடிப்படையில் கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

### 1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | திறைசேரி ஒதுக்கீடுகளைப் பயன்படுத்தி 2022 ஆம் ஆண்டில் 39,478 ஓய்வூதியர்களுக்கு ரூபா 1,041,976,262 பங்களிப்புகள் செலுத்தப்பட்டிருந்ததுடன் இந்தக் கொடுப்பனவுகள் வருமானம் மற்றும் செலவுக் கணக்கில் காட்டப்படவில்லை. உள்ளூராட்சி நிறுவனங்களிடமிருந்து ஆண்டில் பெறப்பட்ட பங்களிப்புகள் ரூபா 91,670,744 ஆக இருந்ததுடன் ஓய்வூதிய நிதியத்தில் இருந்து செலுத்தப்பட்ட தொகைகளாக இத்தொகை பங்களிப்புத் தொகை பெறுவனவுகளுக்கு எதிராக வருமானம் மற்றும் செலவுக் கணக்கில் கணக்கிடப்பட்டிருந்தது. | குறிப்பு இலக்கம் 02, 03 இன் கீழ் கணக்கு குறிப்பாக சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | வருமானச் செலவுக் கணக்கில் பங்களிப்புத் தொகை பெறுவனவுகள் மற்றும் செலுத்துதல்களின் விளைவு காட்டப்பட வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டின் ஒட்டுமொத்த பெறுவனவுகள் ரூபா 91,670,744 உட்பட , முன்னைய ஆண்டிற்கான பெறுவனவுகள் ரூபா 27,070,918, பற்றாக்குறை திரண்ட நிதியத்திற்கு மாற்றப்பட்டதாக வருமான செலவுக் கணக்கில் சீராக்கப்பட்டிருந்தது. | கணக்கீட்டு எண்ணக்கருக்களுக்கு இணங்க வருமான செலவுக் கணக்கின் மிகை அல்லது பற்றாக்குறை திரண்ட நிதியத்திற்கு சீராக்கப்பட்டது. | பங்களிப்புத் தொகை பெறுவனவுகள் மற்றும் செலுத்துதல்களின் அடிப்படையில் வருமானச் செலவுக் கணக்கில் உள்ள மிகை அல்லது பற்றாக்குறை திரண்ட நிதியத்திற்கு சீராக்கப்பட வேண்டும். |

### 1.5.3 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்கு மற்றும் அறிக்கை

| விடயம் | நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் பெறுமதி<br>ரூபா | தொடர்புள்ள அறிக்கை பிரகாரம் பெறுமத<br>ரூபா | வேறுபாடு<br>ரூபா | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| பெற வேண்டிய பங்களிப்பு தொகை | 994,388,194 | 141,701,021 | 852,687,173 | 2022 திசெம்பர் மாதம் அனுப்பட்ட காசோலையொன்று 2023 சனவரி மாதம் எமக்குக் கிடைக்காமையால் 2022 திசெம்பர் மாதம் கணக்கிடப்பட்டமையால் இவ் வேறுபாடு ஏற்பட்டிருந்தது. | மீதி உறுதிப்படுத்தல்களில் பெற வேண்டிய பங்களிப்புப் பணம் உறுதிப்படுத்தப்பட வேண்டும். |

### 1.5.4 கணக்காய்விற்கான எழுத்து மூல சான்றுகள் இன்மை

| விடயம் | தொகை ரூபா | சமர்ப்பிக்கப்படாத கணக்காய்வுச் சான்று | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| பெற வேண்டிய பங்களிப்பு பணம். | 103,587,376 | மீதி உறுதிப்படுத்தல் | எதிர்காலத்தில், இந்த உள்ளூர் நிறுவனங்களிடமிருந்து மீதி உறுதிப்படுத்தல் அறிக்கைகள் பெறப்பட்டு, ஏதேனும் மாற்றங்கள் இருந்தால், அவை சரி செய்யப்படும். | மீதி உறுதிப்படுத்தல்களில் பெற வேண்டிய பங்களிப்புப் பணம் உறுதிப்படுத்தப்பட வேண்டும். |

### 1.6 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

#### 1.6.1 பெற வேண்டிய தொகை

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | உள்ளூராட்சி மன்றமொன்றின் 2019 ஆம் ஆண்டின் கடைசி உறுப்பினரும் இறந்துவிட்ட போதிலும், அறவிடவேண்டிய பங்களிப்புத் தொகையான ரூபா 435,355 ஆனது அறவிடப்படவில்லை. | சம்பந்தப்பட்ட நிறுவனம் குறைந்த வருமானம் பெறும் நிறுவனமாக இருப்பதால், மேற்படி உள்ளூராட்சி மன்றத்தின் அறவிட வேண்டிய ரூபா 435,355 நிலுவைத் தொகையைச் செலுத்துவது கடினம் என்று 2023 மார்ச் 23 ஆம் திகதிய கடிதத்தில், எங்களுக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆனால் எதிர்காலத்தில், தொகையை முழுமையாகவோ அல்லது பகுதிகளாகவோ அறவிடுவதற்கான ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. | பெற வேண்டிய பங்களிப்புப் பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 303 உள்ளூராட்சி மன்றங்களிலிருந்து 2022 திசெம்பர் 31 இல் பெற வேண்டிய பங்களிப்புத்தொகை மீதி ரூபா 1,090,156,001 ஆகவும், 2022 ஆம் ஆண்டில் பங்களிப்புகளைப் பெறாத உள்ளூராட்சி மன்றங்களின் எண்ணிக்கை 82 ஆகவும் மற்றும் அதன் பெறுமதி ரூபா 7,339,172 ஆகவும் இருந்தது. | உள்ளூராட்சி மன்றங்களுக்கு கடிதங்கள் மற்றும் தொலைபேசி அழைப்புகள் மூலம் உள்ளூராட்சி மன்றங்களின் அதிகாரிகளைத் தொடர்பு கொண்டு பெற வேண்டிய பங்களிப்புகளை அறவிடுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதுடன், நிலுவையில் உள்ள பங்களிப்புகளை சரியான முறையில் செலுத்துவது அந்த நிறுவனங்களின் அடிப்படைப் பொறுப்பாகும். | பெற வேண்டிய பங்களிப்புப் பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 1.7 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவக் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| 2016 யூலை 29 ஆம் திகதிய 07/2016 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை 876 (2)(ஆ) | 2016 ஆம் ஆண்டின் வரவு செலவுத்திட்ட முன்மொழிவு 425 மற்றும் 426 மூலம் பாராளுமன்றத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்ட செயல்முறைக்கு இணங்க அனைத்து சட்டப்பூர்வ மற்றும் சட்டப்பூர்வமற்ற நிதிகள் பாராளுமன்றக் கட்டுப்பாட்டிற்கு உட்பட்டவை என்பதை உறுதி செய்வதற்காக பொது திறைசேரியால் 2016 யூன் 11 அன்று விசேட குழுவொன்று நியமிக்கப்பட்டதுடன் இந்த நிதியத்துடன் தொடர்பான சட்டமூலங்கள் திருத்தப்பட்டு மூடப்பட வேண்டும் என மேற்படி குழு பரிந்துரைத்திருந்த போதிலும், அது தொடர்பில் எவ்வித முடிவொன்றும் எடுக்கப்படவில்லை. மேலும், சம்பந்தப்பட்ட நிறுவனங்களிடம் இருந்து நிலுவைத் தொகையை விரைவில் வசூலிக்குமாறு அறிக்கையில் கூறப்பட்டுள்ள பரிந்துரை நடைமுறைப்படுத்தப் படவில்லை. | பொது திறைசேரியால் நியமிக்கப்பட்ட விசேட குழுவினால் 2017 மார்ச் 31 இல் வெளியிடப்பட்ட குழவின் அறிக்கையின் பிரகாரம் உள்ளூராட்சி சேவைகள் ஓய்வூதிய நிதியம் உள்ளிட்ட நிதியங்கள் பாராளுமன்ற சட்டத்தின் மூலம் மூடப்பட வேண்டும் என்று பரிந்துரைக்கப்பட்டுள்ளது. எவ்வாறாயினும், அந்த அறிக்கையை நடைமுறைப்படுத்துவதற்கான அதிகாரம் வழங்கப்படுவது தொடர்பான எந்தவொரு கொள்கை முடிவொன்றும் தெரிவிக்கப்படவில்லை. | நிதியம் மூடப்படுவதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |